## 15 வருட வாழ்கையின் புரிதல்

## 15 YEARS OF MARRIAGE



பார்த்த நொடியில் என் மனதில் தென்றலை போல் நுழைந்தவன்
நான் யார் என்று என்னையே எனக்கு அடையாளம் காட்டியவன்
என்னை அழகாக செதுக்கி முழுமை படுத்திய தோழன்
என் வேர்களை எனக்கு அறிமுகபடுத்திய ஆலவிருக்ஷம் போன்றவன்
என்னை நன்கு புரிந்து அதற்கேற்ப நடக்கும் பண்பான மனிதன்
தனக்கு மிஞ்சியே தான தர்மம் என்ற வரிக்கு முற்றிலும் புறம்பாக நடக்கும் மென்மையான மனிதன்
சில நேரங்களில் அக்னி ஜ்வாலையாக கோபத்தை வெளிபடுத்துபவன்
பல நேரங்களில் அமைதி பூங்காவாக காட்சி தருபவன்
தெளிந்த நீரோடை போல மனதையும் தீட்ஷிண்யமான அறிவையும் கொண்டவன்
மனதில் உள்ளதை மறைக்காமல் பேசும் திறன் பெற்றவன்
எந்த சந்தர்பத்திலும் உண்மை மட்டுமே பேசும் உண்மையானவன்
குழந்தையோடு குழந்தையாக மாறிவிடும் இயல்பினன்
நேற்றைய நிழல் இன்றைய நிஜம் நாளைய கற்பனை என்ற வரிக்கு ஏற்ப,

கடந்த கால வாழ்கையை நன்கு அறிந்து, புரிந்து
நிகழ்கால வாழ்கையை உணர்ந்து, பகிர்ந்து
எதிர் கால வாழ்கையை எதிர் நோக்கி என்னுடன் கைகோர்த்து நிழல் போல
சேர்ந்து நடப்பவன்
அனைவரிடத்திலும் உண்மையாகவும் நேர்மையாகவும் பழகும்
ஆத்மார்தமானவன்
ஓயாமல் கடவுளை எதிலும் எப்பொழுதும் தேடும் ஆன்மீகவாதி
அவன் என் வாழ்க்கை துணைவன் – அவன் என் நண்பன்...

GAYATHRI RAMESH
GRD IYERS
(JUNE 22, 2010)

GRD IYERS